**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2024 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

## பகுதி A

### வினா இல. 01

இங்கு இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு, தரப்பட்ட தெரிவுகளிலிருந்து மிகச் சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. வினா இல. **1.11** தொடக்கம் **1.15** வரையானவற்றில் தரப்பட்ட கூற்றுக்கள் **"சரியானதா"** அல்லது **"தவறானதா"** எனக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. வினா இல. **1.16** தொடக்கம் **1.20** வரையானவற்றுக்கு தரப்பட்ட விடைப் புத்தகத்தில் உரிய விடைகளை எழுதும்படி கேட்கப்பட்டது.

ஒவ்வொரு உப பிரிவு வினாக்களுக்கும் பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகளில் காணப்பட்ட சில பொதுவான வழுக்கள் / பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**1.1** கடந்தகால நிகழ்வுகளின் ஒரு விளைவாக நிறுவனத்தினால் கட்டுப்படுத்தப்படும் தற்கால பொருளாதார வளங்கள் எவை எனக் கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இதற்கு சரியான விடையை அளித்திருந்தனர். ஆனால், சிலர் பொறுப்புக்கள் அல்லது வருமானம் என்றவாறு விடையளித்திருந்தனர்.

**1.2** வினாவில் தரப்பட்ட பொருள்களின் விபரங்களை உள்ளடக்கி கொள்வனவாளர் ஒருவரால் தயாரிக்கப்படுகின்ற சரியான மூல ஆவணம் எது எனக் கேட்கப்பட்டது. மிகச் சிலர் சரியான விடையை அளித்திருந்த போதிலும், பல பரீட்சார்த்திகளால் சரியான விடையை அளிக்க முடியவில்லை.

**1.3** கம்பனிகளுக்கிடையே கணக்கீடு மற்றும் வணிக நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடிய PESTEL பகுப்பாய்விலுள்ள ஒரு பொருளாதாரக் காரணியை தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்த போதிலும், சில பரீட்சார்த்திகளிடம் இது பற்றிய சரியான புரிதல் இல்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**1.4** வணிகத்தை விரிவாக்குவதற்காக வங்கியிலிருந்து ரூபா 500,000/- கடனொன்றை பெற்றுக் கொள்வது கணக்கீட்டுச் சமன்பாட்டை எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றிய மாணவர்களின் அறிவைப் பரீட்சிப்பது இவ்வினாவின் நோக்கமாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்தனர்.

**1.5** இவ்வினா கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய மாணவர்களின் அறிவைப் பரீட்சிப்பதற்காக முன்வைக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள், வரலாற்றுக் கிரய எண்ணக்கரு என்ற சரியான விடையை அளித்திருந்தனர்.

**1.6** இவ்வினா கடன்பட்டோரிடமிருந்தான காசுப் பெறுவனவு காரணமாக கணக்கீட்டுக் கோட்பாடுகளில் ஏற்படும் சரியான தாக்கத்தைத் தெரிவு செய்யுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்குச் சரியான விடை அளித்திருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் சொத்துக்களில் அதிகரிப்பு மற்றும் உரிமையாண்மையில் அதிகரிப்பு என்ற விடையை வழங்கியிருந்தனர்.

**1.7** இங்கு காசேட்டு மீதியும் ஆண்டிறுதியின் வங்கிக் கூற்று மீதியும் தரப்பட்டு, இரண்டு மீதிகளுக்குமிடையிலான வித்தியாசத்திற்கான காரணம் கேட்கப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது சரியான விடைக்குப் பதிலாக வேறு விடைகளை வழங்கியிருந்தனர். சரியான விடை (3) ஆகும்.

**1.8** வினாவில் தரப்பட்ட தகவல்களுக்கு இணங்க, 2024 சனவரி 31 இல் வணிகத்தின் இலாபத்தை தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. இங்கு, சில பரீட்சார்த்திகளால் இலாபத்தைச் சரியாகக் கணிப்பிட முடியவில்லை. இதனால் அவர்கள் சரியான விடையான இல. (1) இற்குப் பதிலாக தவறான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.9** இவ்வினாவில் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் வங்கிக் கூற்று மீதிக்குமிடையிலான வித்தியாசத்திற்கான காரணம் எதுவாகவிருக்கும் என வினவப்பட்டது. பல பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக் கொள்ளாது, சரியான விடைக்குப் பதிலாக தவறான விடைகளை வழங்கியிருந்தனர்.

**1.10** இவ்வினாவில் தரப்பட்ட பரிவர்த்தனைக்கான கணக்கீட்டில் உதவிக் கணக்காளரால் எந்தக் கணக்கீட்டு எண்ணக்கரு மீறப்பட்டுள்ளது என வினவப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அட்டுறு எண்ணக்கரு என்ற சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் **"சரியானதா"** அல்லது **"தவறானதா"** என விடைப்புத்தகத்தில் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் அறிவுறுத்தப்பட்டனர். வினா இல. **1.13** ஐத் தவிர, ஏனைய வினாக்களுக்கு சரியாக விடையளிக்கப்பட்டிருந்தது. வினா இல. **1.13** ஐப் பொறுத்தமட்டில், சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள், *"விற்பனை நாளேடு என்பது கணக்கீட்டுச் செயன்முறையிலுள்ள ஒரு கணக்கீட்டு உள்ளீடாகும்"* என்பது சரியானது எனத் தவறாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.16** அலுவலகத்திற்காக கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணினியொன்றின் கொள்வனவுக்கான மூல ஆவணம் நாட்குறிப்பேட்டு உறுதிச்சீட்டு என்பதை அதிகமான பரீட்சார்த்திகள் சரியாக அடையாளங் கண்டிருந்தனர். **வரையறுக்கப்பட்ட ABC கம்பனிக்கு** கடனடிப்படையிலான பொருள்களின் விற்பனைக்கான மூல ஆவணம் விற்பனை விலைப்பட்டியல் என அடையாளங் கண்டிருந்தனர். ஆனால், பல பரீட்சார்த்திகள் அதனை பிழையாக கொள்வனவு விலைப்பட்டியல் என அடையாளங் கண்டிருந்தனர்.

**1.17** வினாவில் தரப்பட்ட தகவல்களுக்கு இணங்க, பல பரீட்சார்த்திகளால் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயந்திரத்தின் தேய்மானக் கட்டணத்தைச் சரியாகக் கணிப்பிட முடியாமற் போயிருந்தது.

**1.18** பல பரீட்சார்த்திகள் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான உதாரணங்களை சரியாக வழங்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும், சிலர் வியாபாரக் கடன்பட்டோர், இறுதி இருப்புகள் மற்றும் வங்கிக் கடன் போன்ற பிழையான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.19** இவ்வினாவில், நிதித் தகவல்களின் இரண்டு வரையறைகளைக் குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டது. சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இதற்குச் சரியான விடையை அளித்திருந்தனர். சிலர் வரையறைகளுக்குப் பதிலாக, நிதித் தகவல்களின் தன்மையைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.20** இங்கு, சீராக்கத்தின் பொருத்தப்பாட்டு எண்ணக்கருவை சுருக்கமாக விபரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே இதற்குச் சரியான வரைவிலக்கணத்தை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இந்த எண்ணக்கருவுடன் சீராக்கற் குறிப்புகளைத் தொடர்புபடுத்தியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் சில பரீட்சார்த்திகள் இதனை அட்டுறு எண்ணக்கருவுடன் சேர்த்து குழப்பி, விடைகளை அளித்திருந்தனர். இது, இந்த எண்ணக்கரு பற்றிய சரியான புரிதலை பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதி 4 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வழங்கப்பட்டன.

### வினா இல. 02

இவ்வினாவில் செலவினத்தின் தன்மையை இனங்காண்பதுடன் உற்பத்திக் கணக்குகளைத் தயாரிப்பது பற்றிய அறிவும் பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்த அதே வேளை குறைந்தளவான சதவீதத்தினரே இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். கீழ்வரும் பலவீனங்கள் பரீட்சார்த்திகளிடம் அவதானிக்கப்பட்டன.

(1) சில பரீட்சார்த்திகளுக்கு உற்பத்திக் கணக்குகள் பற்றிய அறிவு காணப்படவில்லை, அவர்கள் வெவ்வேறு வடிவமைப்புகளில், வெவ்வேறு கணிப்பீடுகளை இவ்வினாவுக்காகச் செய்திருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் நேர் மற்றும் நேரில் கிரயங்களைச் சரியாக இனங்காண்பதில் குறைந்தளவான அறிவையே கொண்டிருந்தனர்.

(3) புத்துருவாகும் வேலைச் சீராக்கத்தில், சீராக்கத்தை எவ்வாறு பிரயோகிப்பது, எங்கு பிரயோகிப்பது என்பது பற்றிய அறிவை அவர்கள் கொண்டிருக்கவில்லை. அத்துடன், அதிகளவான பரீட்சார்த்திகள் சக, சய அடையாளங்களைப் பிழையாக பயன்படுத்தியிருந்தனர்.

(4) முதன்மைக் கிரயத்தை பிழையாக சீராக்கம் செய்திருந்ததால் பரீட்சார்த்திகள் தமது புள்ளிகளை இழந்திருந்தனர்.

(5) குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் மேந்தலைச் செலவின பகிர்வுச் சீராக்கங்களைச் சரியாகச் செய்திருக்கவில்லை.

(6) தேய்மானக் கட்டணத்தைக் கணிப்பிடும்போதும் மேந்தலைக் கிரயத்தின் கீழ் அவற்றை இனங்காணும்போதும் அதிகளவான தவறுகள் விடப்பட்டிருந்தன.

(7) 20% இலாப எல்லை தவறாகப் பிரயோகிக்கப்பட்டிருந்தது.

(8) சில பரீட்சார்த்திகள் சரியான வடிவத்தைப் பயன்படுத்தவில்லை.

### வினா இல. 03

பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்ததன் பின்னர், பரீட்சை மீதியைத் தயாரிப்பது தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவை இவ்வினா பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்த போதிலும், குறைந்த சதவீதத்தினரே இவ்வினாவுக்கு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பரீட்சார்த்திகளிடம் கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

(1) சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியைத் தயாரித்திருக்கவில்லை என்பதுடன் அவர்கள் பொதுப் பேரேட்டுக் கணக்குகளையும் இலாப, நட்டக் கூற்றையும் தயாரித்திருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகள் பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்கும்போதும் பரீட்சை மீதிக்கான விற்பனை மற்றும் கொள்வனவுகளை அடையாளங் காண்பதிலும் தவறுகள் விட்டிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் சில்லறைக் காசு செலவினங்கள் ஊடாக செலவினங்களை ஒதுக்கும் போதும் சில்லறைக் காசு மீதியை ஏற்பிசைவு செய்யும்போதும் தவறுகளை விட்டிருந்தனர்.

(4) தேய்மானத்தைக் கணிப்பிடும்போது பரீட்சார்த்திகள் தவறு விட்டிருந்தனர்.

(5) சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியில் வரவு மீதிகளை செலவாகவும் செலவு மீதிகளை வரவாகவும் பதிந்திருந்தனர்.

(6) சில பரீட்சார்த்திகள் அட்டுறு செலவினங்களைச் சரியாகப் பிரயோகித்திருக்கவில்லை என்பதுடன் மீதிகளையும் சரியாக ஏற்பிசைவு செய்திருக்கவில்லை.

## வினா இல. 04

இவ்வினா வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிப்பதையும் தொங்கற் கணக்கைத் தயாரிப்பதையும் தேவைப்படுத்தியிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமாக விடையளித்திருந்தனர். விடைத்தாளை மதிப்பிடும்போது கீழ்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

(1) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(2) நாட்குறிப்பேட்டுப் பதிவுடன் தொடர்புடைய வரவு மற்றும் செலவுப் பெறுமதிகள், நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதும்போது இடமாற்றி எழுதியிருந்தனர்.

(3) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதும்போது, முதலாவதாக வரவுப் பதிவும் அடுத்ததாக செலவுப் பதிவும் எழுதப்பட வேண்டும், ஆனால் சில பரீட்சார்த்திகள் செலவுப் பதிவை முதலிலும் வரவுப் பதிவை அடுத்ததாகவும் எழுதியிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் வழுக்களைத் திருத்தும்போது, தொங்கற் கணக்கினால் திருத்தப்பட வேண்டிய வழுக்களைச் சரியாக இனங்காணத் தவறியிருந்தனர்.

(5) பல பரீட்சார்த்திகள் வட்டிச் செலவினமாகப் பெறப்பட்ட வட்டி வருமானத்தின் கணக்கீடு தொடர்பாகத் திருத்துகின்ற நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைச் சரியாகச் சுட்டிக்காட்டத் தவறியிருந்தனர்.

(6) அலுவலகச் செலவினமாக அலுவலக உபகரணத்தின் கொள்வனவுக்கான கணக்கிற்கு திருத்தப் பதிவுகள் சரியாக இனங்காணப்பட்டிருந்தன. ஆனால் பல பரீட்சார்த்திகள் ரூபா 50,000/- தேய்மானத்தைக் காட்டியிருக்கவில்லை.

## வினா இல. 05

இவ்வினா **A, B** என இரண்டு பகுதிகளைக் கொண்டது. **பகுதி A** ஆனது கொடுக்கல் வாங்கலொன்றின் கணக்கீட்டுச் சமன்பாடு மீதான தாக்கத்தைப் பரீட்சித்திருந்த அதே வேளை, **பகுதி B** ஆனது வங்கி கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது.

### பகுதி (A)

பல பரீட்சார்த்திகள், கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தைச் சரியாக இனங்கண்டிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள், கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய சமன்பாட்டில் ஒவ்வொரு உருப்படி மீதுமான தாக்கத்தைத் தொடர்புபடுத்தாது மொத்தச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களில் அதிகரிப்பு அல்லது குறைவு என்பதை மாத்திரம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

### பகுதி (B)

**(a)** சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கைத் (காசேட்டைத்) தயாரிக்கும்போது அவதானிக்கப் பட்ட பொதுவான பலவீனங்கள் :

(1) செலவுப் பதிவு செய்யப்பட வேண்டிய பரிவர்த்தனைகள் வரவுப் பதிவு செய்யப்பட்டும், வரவுப் பதிவு செய்யப்பட வேண்டிய பரிவர்த்தனைகள் செலவுப் பதிவு செய்யப்பட்டும் இருந்தன.

(2) சில பரீட்சார்த்திகளால் தரப்பட்ட பரிவர்த்தனைகளை காசேட்டில் திருத்துவதா அல்லது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டுவதா என்பதைச் சரியாக இனங்காண முடியவில்லை. சிலர் சீராக்கப்பட்ட காசேட்டில் அனைத்து பரிவர்த்தனைகளையும் இணக்கம் செய்திருந்தனர்.

(3) காசேட்டின் ஆரம்ப மீதி வரவு மீதியாக இருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் காசேட்டைத் திருத்தித் தயாரிக்கும்போது செலவு மீதியாகப் பதிந்திருந்தனர்.

**(b)** வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும்போது அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் :

வங்கிக் கூற்றைத் தயாரிக்கும்போது எவ்வகையான பரிவர்த்தனைகள் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பது பற்றிய தெளிவான புரிதலைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதற்கிணங்க, காசேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய பரிவர்த்தனைகள் வங்கிக் கணக்கிணக்கத்திலும் வங்கிக் கணக்கிணக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய பரிவர்த்தனைகள் காசேட்டிலும் குறிப்பிடப்பட்டிருந்தன. உதாரணமாக, ரூபா 50,000/- நிலையியற் கட்டளையின் கீழ் வங்கியால் வரவு வைக்கப்பட்ட மாதாந்த வாடகைத் தொகையினை காசேட்டு மீதியில் திருத்துவதற்குப் பதிலாக சில பரீட்சார்த்திகள் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் இணக்கம் செய்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

## பகுதி C

**வினா இல. 06**

இவ்வினா தனியுடமை வியாபாரம் ஒன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்ததுடன் 20 புள்ளிகளைப் பெறக்கூடிய **(a), (b)** என இரண்டு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. **பகுதி (a)** ஆனது முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்த அதே வேளை, **பகுதி (b)** ஆனது நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது. ஒட்டுமொத்தமான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது. பொதுவாக அவதானிக்கப்பட்ட வழுக்களும் விடுபாடுகளும் கீழ்வருமாறு :

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு :**

(1) போக்குவரத்துச் செலவினம் ரூபா 900,000/- விற்பனைக் கிரயத்திற்குச் சேர்க்கப்பட்டிருந்தது.

(2) ரூபா 50,000/- அறவிடமுடியாக் கடனாகப் பதிவு செய்யப்படவில்லை.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் கணக்கீட்டுக் காலப்பகுதியுடன் தொடர்புடைய காப்புறுதிச் செலவினத்தைச் சரியாகக் கணிப்பிடவில்லை.

(4) மின்சாரம் மற்றும் அலுவலக வாடகையின் அட்டுறு செலவினங்கள், ஆண்டிற்கான செலவினங்களில் சரியாக சீராக்கம் செய்யப்படவில்லை.

(5) அலுவலக உபகரணத்தின் தேய்மானம், அதன் கொள்வனவுத் திகதியைக் கவனத்திற் கொள்ளாமல் முழு ஆண்டிற்காகவும் கணிக்கப்பட்டிருந்தது.

(6) வங்கிக் கடன் வட்டியும்கூட கடன் பெற்ற திகதியைக் கருத்திற் கொள்ளாது முழு ஆண்டிற்காகவும் கணிப்பிடப்பட்டிருந்தது.

(7) சில பரீட்சார்த்திகள் மொத்த இலாபத்தைக் கணிக்கும்போது, ஆரம்ப இருப்பை இறுதி இருப்பாகவும் இறுதி இருப்பை ஆரம்ப இருப்பாகவும் எடுத்திருந்தனர்.

(8) பரீட்சை மீதியின் பெறுமானங்கள் ஆயிரங்களிலும் சீராக்கத் தொகைகள் முழுமையான பெறுமானங்களாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் சில பெறுமானங்களை ஆயிரங்களில் காட்டியிருந்த அதே வேளை சில பெறுமானங்களை ஆயிரங்களுக்கு முழுமையாக்கவில்லை. இவ்வாறு பதிவுசெய்யப்பட்ட தொகைகளின் துல்லியமற்ற தன்மை காரணமாக சிலர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளத் தவறியிருந்தனர்.

(9) முற்றடக்க வருமானக் கூற்றானது பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் அதிகளவான பரீட்சார்த்திகளுக்கு செலவினங்களைச் சரியாக வகைப்படுத்தத் தெரிந்திருக்கவில்லை.

(10) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றை வணிகத்தின் பெயருடன் சேர்த்து குறிப்பிடவில்லை.

(11) நிருவாகச் செலவினங்கள், விநியோகச் செலவினங்கள் மற்றும் நிதிச் செலவினங் களுக்கான விபரமான செய்முறைகளை சில பரீட்சார்த்திகள் இணைத்திருக்கவில்லை.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு :**

(1) ஆண்டின் காலப்பகுதியில் அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பானது வியாபார வருமதி களிலிருந்து கழிக்கப்படவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் 2022 ஏப்ரல் 01 இல் உள்ளபடியான திரண்ட தேய்மானத் தொகையைச் சேர்க்காது திரண்ட தேய்மானமாக ஆண்டிற்கான தேய்மானத் தொகையை மாத்திரம் காட்டியிருந்தனர்.

(3) காப்புறுதி முற்கொடுப்பனவானது பதிவு செய்யப்படவில்லை.

(4) கடன் பெற்ற திகதியைக் கருத்திற் கொள்ளாது அட்டுறுவான வங்கிக் கடன் வட்டி கணிக்கப்பட்டதால் அது தவறான பெறுமானமாக இருந்தது.

(5) சில பரீட்சார்த்திகள் வங்கிக் கடனை நடைமுறைப் பரிப்புக்களாக முன்வைத்திருந்தனர்.

(6) நிதி நிலைக் கூற்று பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படாததுடன் வணிகத்தின் பெயரும் கணக்கீட்டுக் காலப்பகுதியும்கூட குறிப்பிடப்படவில்லை.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிக்கவும். புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனம் செலுத்தவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**(3)** இப்பாடத்துடன் தொடர்புடைய புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், நாட்குறிப்பேடுகளைப் படிக்கவும்.

**(4)** அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களைச் சரியாக இனங்காண்பதுடன் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாக வெளிப்படுத்தவும்.

**(7)** அதிகளவான கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(8)** உங்களது நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தவும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிக்கவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் முனைப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -